ஜவ்வாது மலைப்பகுதியில் கந்தகம்

* 425 வினா.—திரு. தொ. ப. சீனிவாசன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் ஜவ்வாது மலைப்பகுதியில் கந்தகம் கிடைப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதை ஆராய்ச்சி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம். போளூர் தாலுகாவில் தனியார் காட்டில் ஜவ்வாது மலைக்குக் கிழக்கேயுள்ள பெரியமலையில் கந்தகம் பூப்புகளும் கந்தகம் அடங்கிய தாதுவும் காணப்படுகின்றன.

(இ) இந்திய புவியியல் பிரிவு இப்பகுதியில் தற்பொழுது கந்தக கனிவளத்தை அறிய விரிவான ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளது. இவ்வேலை தொடர்ந்து நடந்து வருகிறது.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆராய்ச்சி தற்போது முடிவு அடைந்து விட்டதாகத் தெரிகிறது. பக்கத்தில் இருக்கும் கேளூர் பகுதியில் அதே போன்று கந்தகம் இருப்பதாக அங்கே உள்ள மக்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த இடத்தையும் ஆராய்ச்சி நடத்த அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பரிசீலனையில் 24,000 டன் சல்பைடும், 25 சத விகிதம் சல்பரும் இருப்பதாகத் தெரிகிறது. அது பற்றி தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

காவிரி டெல்டாப் பகுதியில் எண்ணெய் வளம்

426 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி டெல்டாப் பகுதியில் எண்ணெய் வள ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறதா ?

(இ) அதன் மூலம் இதுவரை கிடைத்த பலன்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம். இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

(இ) வணிக முறையில் எடுக்கக்கூடிய அளவிற்கு எண்ணெயோ அல்லது இயற்கை வாயுவோ மண்டியிருப்பதாக இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.